# திருக்குறளில் அறம்சார் உணர்வுகள்

11

முனைவர் இரா. மோகனா
தமிழ்த்துறை, உதவிப் பேராசிரியர்,
ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி, அண்ணா நகர், சென்னை- 40
rmohana2582@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

திருக்குறளில் அறம்சார் உணர்வுகள் என்ற தலைப்பிலான இக்கட்டுரையானது அறம் என்பதற்கான விளக்கம், அறம் குறித்து அகராதிகள் பிற நூல்களில் கூறியுள்ள விளக்கங்கள்,அறக்கோட்பாடு, அன்பே அறம், அறத்தால் வருவதே இன்பம், அன்பின் அருமை, அறத்தின் அடிப்படை, அறத்தின் தேவை, குடியியலில் அறம் சார்ந்த கருத்துகள், படையியலில் அறம் சார்ந்த கருத்துகள், இல்லறவியல் காட்டும் அறம், துறவறவியலில் அறம் , மனதில் குற்றம் களைதல் எனப் பல உட்தலைப்புகளின் வழியாக அறம் சார்ந்த உணர்வுகளையும் அறம் மனித வாழ்வில் பெரும் இடத்தையும் ஆய்வதாக அமைந்துள்ளது

**ஆய்வு நோக்கம்**

தொல்காப்பியர் காலத்தில் இருந்தே பயன்படுத்தப்பட்டு வந்துள்ள அறம் மனிதனின் வாழ்வோடு பின்னிப்பிணைந்துள்ளது. அத்தகைய அறத்தின் வழி மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளை எவ்வாறு கடைபிடிக்க வேண்டும் கடைப்பிடிப்பதால் கிடைக்கும் இன்பம் மீறுவதால் வரும் துன்பம் போன்றவற்றை வள்ளுவர் குறளில் சுட்டிச் சென்றுள்ளார். அதனை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்**

அறநெறி ஒழுக்கம், உயிரோம்பல்,மனித வாழ்க்கை நெறி, மனைமாட்சி, மனத்தூய்மை

**அறம் - பொருள் விளக்கம்**

அறம் என்ற தமிழ்ச் சொல்லுக்கு இணையான ஆங்கிலச் சொல் 'Ethics' என்பதாகும். இது தனிமனிதன் பிறருடன் தொடர்பு கொள்ளத் துணை செய்யும் இயல்பான ஒழுக்கமாகும். அறு' என்னும் வினைச்சொல்லடியாகப் பிறந்ததே அறம். அறு என்னும் அடிச்சொல்லிற்கு ‘அறுத்துச்செல்', வழியை உண்டாக்கு, உருவாக்கு, துண்டி, வேறுபடுத்து என்ற பலவகைப் பொருள்கள் உண்டு. “அம்' எனும் தொழிற்பெயர் விகுதி அறுத்தலாகியத் தொழிலை உணர்த்துகிறது. தீமையை நீக்குவது, குறைகளை அகற்றுவது, குற்றத்தைத் துடைப்பது, மதத்தை ஒழிப்பது, உலக ஆசைகளிலிருந்து விடுபடுவது எனப் பலப் பொருண்மைகள் உள்ளன. அறம் என்பது நீதி என்பதன் அளவு அல்ல. சமுதாயத்தில் தோன்றும் ஒரு இயற்கைப் பேராற்றல்.

முறையான வாழ்வியல் நெறிமுறைகளில் ஒன்று" எனத் திருக்குறளும் மற்றும் மனுநெறித் திருநூலும் விளக்கம் கூறியுள்ளன. இத்தகைய சொல்லாராய்ச்சியின் அடிப்படையில், மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே - முழு நிறை வடிவமே அறம் ஆகும்.

அறக் கோட்பாடு கொண்டு இன்பமுடன் வாழ வேண்டும் என்பது தமிழர்களின் கொள்கை. வீடு என்பது அறம் என்கின்ற வகையில் அடங்கக் கூடியது. மக்களுக்கு நன்மை செய்வது என்பது உறுதிப் பொருள் என்றும், சிறப்புடைமை என்றும் கூறப்படுகிறது. இதனால் தான் அறம் முதன்மையாக வைக்கப்பட்டு, அடிப்படை மெய்ப்பொருளாகக் கூறப்படுகிறது. அறம் என்ற சொல் தொல்காப்பியர் காலத்திலிருந்தே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

**திருக்குறளில் அறம்**

கி.பி. 2ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் மனித குலத்தின் பல்வேறு தவறான நிலைகளை எடுத்துரைத்தும் மனித குலம் வாழ வேண்டிய வழிகுறித்தும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் பெரும் பகுதி நீதி அறநெறியாகவும் எடுத்துரைக்கும் இலக்கியங்கள் பதி ணென்கீழ்க்கணக்குகளுள் முதன்மையானது திருக்குறள் ஆகும். மனித வாழ்வில் அறம் இன்றியமையாதது ஆகும். அறம் மூன்று வகையாக (1) ஆன்மீக அறம் (2) ஈதல் அறம் (3) காதல் அறம் என திருவள்ளுவர் 'அறம்' குறித்துக் கூறியுள்ளார்.

அறம் என்பது வரையறுக்கப்பட்ட ஒழுங்குமுறை. தனி மனிதனின் கடமைகளை, செயல்முறைகளை ஒழுங்குபடுத்தி, சமூகத்தில் ஓர் அங்கமாக அவனை வழிநடத்துகிறது. அறமானது சிறப்பையும் தரும், செல்வத்தையும் தரும். அதனால் மக்களுக்கு அறத்தைவிட நன்மை பயப்பது வேறு என்ன இருக்கிறது. வாழ்க்கையில் இன்பம் என்றும் நிலைத்திருக்க வேண்டும் என்றால் அறம் செய்ய வேண்டும், அறநெறி ஒழுக்கத்தில் வாழ்பவன் இன்பத்தையும் புகழையும் எளிமையாகப் பெறுவான் என்பதை, “அறத்தான் வருவதே இன்பம்” என்று வள்ளுவர் கூறுகிறார். எலும்பில்லாத புழு போன்ற உயிர்களை வெயில் காய்ந்து கொல்லுவது போல அன்பில்லாத உயிர்களை அறம் வருத்தும் (கு.77)

**அன்பே அறம்**

‘அறம்’ எனப்பட்ட இல்வாழ்க்கை என்பது கணவன் மனைவிக்கு இடையே அன்பும், அறம் செய்யும் குணமும் இருக்கவேண்டும் என்ற வள்ளுவரின் கருத்து கவனத்திற்குரியது. சிந்தனையில் இருந்தே செயல்கள் எழுகின்றன. ஒருவர் மனதில் நினைத்ததை, எண்ணியதைக் கருதியவாறே முடிப்பது அறமாகும். அறத்திற்கு அடிப்படை ஒருவர் தீய எண்ணங்களை மனத்திற்குக் கொள்ளாமல் இருத்தலே ஆகும்.

அறத்திற் சிறந்தது அன்பேயாகும். அன்பின் முதிர்ச்சியில் பிறப்பது அருளாகும். அருளின்றிச் செய்யும் அறவினைப் பயன்படாது. அறங்களுள் கொல்லாமையே சிறந்த உயிரோம்பலாக, சிறந்த அறமாக வள்ளுவர் கூறுகிறார். இவ்வுலகில் வாழ வேண்டிய முறைப்படி

அறநெறியில் நின்று வாழ்கின்றவன் சிறந்தவன், எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்ற கருத்தினைத் தகர்த்து அறநெறியில் வாழவேண்டும். அப்படி அறநெறியில் வாழ்பவனை "தெய்வத்தை" எப்படி மதிக்கின்றார்களோ, அதுபோல இவ்வுலகில் உயர்வாக மதிக்கப்படுவான். நம்மிடத்தில் யார் தீங்கு செய்தாலும் அவனைப் பழிவாங்க வேண்டும் என்று எண்ணாமல் நன்மை செய்வதையே சிறந்த அறம் என்று கூறுகிறார் வள்ளுவர்.

**அறத்தின் அடிப்படை**

தன்னுயிர்போல் மன்னுயிரையும் நினைத்து, மற்றவரது துன்பத்தையும் தமதாக எண்ண வேண்டும். பிறருக்கு நம்மால் இயன்றவாறெல்லாம் உதவும் இயல்பினதாகிய அறத்தை அறிஞர் பலர், பல வகைகளாகப் பிரித்துள்ளனர். அந்தவகையில் அ.ச.ஞான சம்பந்தன் அவர்கள், "அறம் இரண்டு வகைப்படும். முதலாவது வகை காலத்துக்கு ஏற்ப மாறுபடும் இயல்புடையது. இரண்டாவது வகை எக்காலத்தும் யாவர்க்கும் பொதுவான அறங்கள். அவை என்றும் மாறுபடுவதில்லை. இவற்றை அடிப்படையான அறங்கள் என்று கூறலாம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

**அறத்தின் தேவை**

'குடும்ப வாழ்வும் பொதுவாழ்வும் சீராக இயங்க ஒருவர் கடைபிடிக்கும் சமயச்சார்பான அல்லது ஒழுக்கக் கண்ணோட்டத்துடன் கூடிய நெறிமுறைகள் அல்லது கடமைகள் அறமாகும். அறம் செய்தலைவிட ஒருவர்க்கு நன்மைதரும் செயல் ஒன்றுமில்லை. அதுபோல் அறம் செய்தலை மறத்தல் என்பது ஒருவர்க்கு மிகப்பெரிய கேட்டினை விளைவிக்கும். (குறள்.32) தொடர்ந்து பின்னர் செய்யலாம் என்று அறம் செய்வதனைத் தள்ளிப்போடுதல் கூடாது என்றும் அவ்வறமே பிற்காலத்தில் இறவாத் துணையாக நிற்கும் என்றும் உரைக்கின்றார். மனமாசின்றி வாழும் வாழ்க்கை சிறப்புடையது. அதுவே அறங்களில் முழுமையானது அதுவே மனித வாழ்க்கைநெறி என்கிறார் (கு. 34).

**குடியியலில் அறம்**

பிறவியினால் அனைவரும் சமம் எனக் கூறும் வள்ளுவர், சில பண்புகளால் ஒரு சில மனிதரை உயர்குடி மனிதர் எனப் பிரித்துள்ளார். அவை ஒழுக்கம், வாய்மை, நாணம் (குறள் 752), முகமலர்ச்சி (குறள் 953) போன்ற குணங்கள் மனிதர்க்கு வேண்டிய உயர்வைத் தரக்கூடியது எனக் கூறியுள்ளார். மேலும், "ஒருவர் நலம் வேண்டின் நாணுடைமை வேண்டும். குலம் வேண்டின் வேண்டுக யார்க்கும் பணிவு" (குறள் 960) என்கிறார். எனவே மனிதர்க்கு வேண்டியதை நாணம் மற்றும், உயர்பண்பு என்று கூறிக் குடியியல் வாழ் அறத்தைச் சிறப்பித்துள்ளார்.

**படையியலில் அறம்**

படைக்கு நல்ல தலைமை, மனஉறுதியுடன் போராடும் திறன்மிகு வீரர்கள், காவல் போன்றவை இருத்தல் வேண்டும். அத்தகு சிறந்த வீரர்கள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளை வள்ளுவர் கூறும்போது, ஒருபடையானது போர்க்களத்தில் போரிடச் செல்லும் போதும், போரிடும் போதும்

எதிரில் பகை ஒன்று திரண்டு கடல் போலச் கூச்சலிடுகிறது அதைக் கண்ட வீரன், அவை கெட்டழியும் என்னும் நம்பிக்கையுடன் போரிட வேண்டும். அதுவே படைக்கெல்லாம் சிறந்த அறம் (கு.770) இவை, இல்லாமல் போவதாலே பல போர்கள் தோற்றுள்ளன என்பதற்குக் திருக்குறளே சான்று.

**இல்லறவியலில் அறம்**

கணவன், மனைவி, மக்கட்பேறுடன் வாழ்வதே இல்லறமாயினும் தமிழ் நாட்டு இல்லறத்தைப் பேணிப் பாதுகாக்க வள்ளுவர், குடும்பம் என்பது மூன்று வகையினரை உள்ளடக்கியள்ளது. (1) பெற்றோர் (2) மனைவி (3) மக்கள் இவர்களைக் கடமை தவறாமல் பாதுகாப்பவனே சிறந்த குடும்பத்தலைவன் ஆவான் என்கிறார். (குறள் 41) குடும்பத்திற்கு அழகு சேர்ப்பவள் மனைவி, அக்குடும்பத்தின் பெருமை, புகழ் யாவும் அவளையே சேரும். எனவே, குடும்ப நிலைமை அறிந்து அதற்கேற்ப நடந்து கொள்ளும் மனைவி என்றால் அந்தக் குடும்பம் நல்ல பெருமையும் அழகும் பெற்று இனிதாய் விளங்கும் (குறள் 52) என்கிறார் வள்ளுவர். இல்லறத்தில் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் வாழ்க்கையில் அன்பியல் நிகழ்வுகள் பாசத்தோடு நீடிப்பின் அது கற்பியல் அறமாகும் என்பர். "கயல் மீன் போன்ற மையுண்ட என் கண்கள் என் விருப்பத்திற்கேற்ப தூங்குமானால் அப்போது கனவில் வரும் காதலர்க்கு நான் பிழைத்திருக்கும் உண்மையைச் சொல்வேன் என்றும் (கு.1212). உன்னைத்தான் நினைத்தேன் என்று தலைவன் கூற, உடனே தலைவி மறந்தால் தானே நினைக்க முடியும். ஏன் மறந்தீர்? (கு 1316). இதுவே கற்பியலில் அறம் என வலியுறுத்தியுள்ளார் வள்ளுவர்.

**துறவறவியலில் அறம்**

மண், பொன், பெண், உறவு, உணவு போன்றவற்றில் பற்றற்ற நிலையைத் துறவு நிலை என்று சான்றோர் கூறினும் முதற்பாவலர், ஒருவர் துறவு மேற்கொண்ட பிறகு அருளைப் பெறுதல் வேண்டும் என்பதைச் "செல்வத்தை இழந்துவிட்டால் மீண்டும் முயன்று தேடிக்கொள்ள முடியும்". அருள் இல்லாதவர் இல்லாதவரே, செல்வம் உடம்போடு செல்கிறது. அருள் உயிரோடு வாழ்கிறது. அதுவே உண்மையான துறவறம் என்கிறார் முதற்பாவலர். தூய மனத்தின் வழி வரும் மொழியும் செயலும் தூயனவாக இருக்கும். ஆகவே மனத்தை எவ்வகை மாசும் படியாமல் காக்க வேண்டும். இல்லறமாயினும் துறவறமாயினும் திருவள்ளுவர் மனத்தூய்மையையே வற்புறுத்துகின்றார்.

**முடிவுரை**

திருவள்ளுவர் கூறும் அறச் செய்திகள் அனைத்தும் மனித வாழ்விற்கு முக்கியமானதாக அமைந்துள்ளன. வள்ளுவர் வகுத்துள்ள அறவியலில் இல்லறம், துறவு, மனிதவாழ்வு, என்பவை அனைத்தும் மற்ற நூல்களிலிருந்து வேறுபட்டும், புதிய பல கருத்துகளையும் கூறுவதாக அமைந்துள்ளது என்பதே இக்கட்டுரையின் முடிபாகும்.

**துணைநூல்கள்**

1. இளங்குமரனார். இரா. திருக்குறள் வாழ்வியல் உரை, தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2004
2. இராசேந்திரன். தி.வெ., திருக்குறள் ஒரு சமூகப் பார்வை,
3. குணா, வள்ளுவத்தின் வீழ்ச்சி, தமிழக ஆய்வரண், பெங்களூர்.
4. சிதம்பரம் பிள்ளை.வ.உ, திருக்குறள் தெளிவுரை, வ.உ.சி நூலகம், சென்னை.
5. திருநாவுக்கரசு. க.த., திருக்குறள் நீதிக் களஞ்சியம்,
6. நாமக்கல் கவிஞர், திருக்குறள் மூலமும் தெளிவுரையும் தமிழ் நிலையம், சென்னை, 2017
7. பாவாணர், திருக்குறள் தமிழ் மரபுரை, ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை, 3 ஆம் பதிப்பு, 2011
8. முத்துக்குமாரசுவாமித் தம்பிரான், திருக்குறள் உரைக்கொத்து, திருப்பனந்தாள் காசி மடம், 1969

.